DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 38/2024 Crime No. 132/2024 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW-6- கார்த்திகேயன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.05.2025 |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் குருப்பநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளேன். தேதி, மாதம் நினைவில்லை கடந்த சுமார் 1 வருடத்திற்கு முன்பு ஒரு நாள், நானும், பட்டியல் சாட்சி-8 ம் பைக்கில் எங்கள் சொந்த வேலை காரணமாக சிங்கம்பேட்டை சென்று கொண்டிருந்தபோது, சிங்கம்பேட்டை அருகில் கூட்டமாக இருந்தது. அங்கு சென்று விசாரித்த போது காவலர்கள் திருட்டு வழக்கு தொடர்பாக இருவரை கைது செய்துள்ளதாகவும், அதற்கு சாட்சியாக இருக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் இருவரும் சம்மதித்து சாட்சியாக இருந்தோம். நீதிமன்றத்தில் தற்போது முன்னிலையாகியுள்ள இரு நபர்கள் தான் அன்றைய தினம் போலீசார் கைது செய்த நபர்கள் ஆவார்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். பின்னர் எதிரிகள் இருவரும் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையப்பம் செய்தேன். அப்போது போலீசார், எதிரிகள் வந்த பைக்கை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள்அழைத்துச் சென்று அடகு வைத்திருந்த செயினை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பைக்கை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றப்பட்ட பைக் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தங்க சங்கிலியை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குத் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்தில் போட்டோ எடுப்பது தொடர்பாக அடிக்கடி காவல் நிலையம் செல்வது வழக்கம் என்றால், சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொன்ன தேதியிலும் காவல் நிலையம் சென்றீர்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் 5-6 வெற்றுத் தாள்களில் கையொப்பம் செய்தீர்கள் என்றால், சரிதான். கையொப்பம் செய்த தேதியில் எதற்காக கையொப்பம் செய்தேன் என்ற விவரம் தெரியாது என்றால், சரிதான். நீதிமன்றம் சாட்சியம் அளிக்க வந்த பின்னர்தான் ஆஜர் எதிரிகள், சான்றுப் பொருள் மற்றும் சான்றாவணங்கள் தெரியும் என்றால், சரியல்ல. எனக்கு ஏற்கனவே தெரியும். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்றத்தில் பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித சான்றுப் பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நீங்கள் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.